தேதி : ஜனவரி 20, 2014

# <u>லோக்பாலை நியமிப்பது யார்</u>

**- அருண் ஜெய்ட்லி**

*எதிர்க்கட்சி தலைவர் (மாநிலங்களவை)*

லோக்பால் மற்றும் லோகயுக்தா சட்டம் ஒருவழியாக 2013இல் நிறைவேற்றப்பட்டுவிட்ட்து. குடியரசுத் தலைவரின் ஒப்புதலை 2014 ஜனவரியில் பெற்றபின் அரசிதழில் அது குறிப்பிடப்பட்டுவிட்டது. .. லோக்பால் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகளை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரும் விரிவான விளம்பரம் பணியாளர்கள் மற்றும் பயிற்சி துறையின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. முறையான விண்ணப்ப படிவம் இணைக்கப்பட்டிருப்பதோடு விண்ணப்பிப்பதற்கான விதிகள் மற்றும் தகுதிகளும் விளம்பரத்தில் வழங்கப்பட்டுள்ளன.

யார் இந்த செயல்முறையைத் தொடங்கியது? பணியாளர்கள் மற்றும் பயிற்சிக்கான துறைதான் இந்த முழுச் செயல்முறையையும் தொடங்கி, பதவிகளுக்கான விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது என்பது இந்த விளம்பரத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட சட்டத்தைப் படித்ததில் இந்த துறைக்கு இதுபோன்ற விண்ணப்பங்களுக்கு அழைப்புவிடுப்பதற்கான அதிகாரம் இல்லை என்று தெரியவருகிறது.

இந்த சட்டத்தின் 4அம் பிரிவு லோக்பாலுக்கான உறுப்பினர்களை நியமனம் செய்வதைப் பற்றியது. பிரதமர், மக்களவை சபாநாயகர், மக்களவை எதிர்க்கட்சி தலைவர், இந்தியாவின் தலைமை நீதிபதி அல்லது அவரால் நியமிக்கப்பட்ட வேறொரு நீதிபதி, இந்த நான்கு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு புகழ்பெற்ற சட்ட வல்லுனர் ஆகியோரைக் கொண்ட தேர்வு ஆணையம் ஒன்று இருக்கிறது. இன்று வரை தேர்வுக் ஆணையத்தின் நான்கு உறுப்பினர்களும் சந்திக்கவில்லை என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது.. முதல் முறையாக அமைக்கப்படும் லோக்பாலில் இந்த நான்கு உறுப்பினர்களும் சந்தித்து ஐந்தாவது உறுப்பினரை நியமிப்பதற்கான பெயர்களை பரிசீலிக்க வேண்டும். ஐந்து உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுவிட்ட பின் இந்தத் தேர்வு ஆணையம் லோக்பால் உறுப்பினர்கள் பட்டியலை உருவாக்கும் நோக்கத்துக்காக லோக்பால் தேடுதல் ஆணையத்தை உருவாக்க வேண்டும். . இந்த தேடுதல் ஆணையம் பல்வேறு துறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 7 உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். இந்த தேடுதல் ஆணையம் தலைமை உறுப்பினர் மற்றும் இதர உறுப்பினர்களாக தேர்த்நெடுக்கப்படுவதற்குப் பொருத்தமான பெயர்களை தேடும் பணியில் இறங்கும்.

தேர்வு ஆணையம் லோக்பாலின் தலைமை உறுப்பினர் மற்றும் இதர உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் செயல்முறையை வெளிப்படையானதாக ஒழுங்கபடுத்த வேண்டும் என்று 4ஆம் பிரிவின் 4ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.. தேடுதல் ஆணையம் பரிந்துரைத்த நபர்களிலிருந்து உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கான நபர்களின் பெயர்களை தேர்வு ஆணையம் பரிந்துரைக்கும். தேடுதல் ஆணையத்தால் பரிந்துரைக்கப்படாத நபர்களையும் தேர்ந்தெடுப்பது குறித்து பரிசீலிக்க தேர்வு ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளது. நியமிக்கப்படும் எட்டு நபர்களில் நால்வருக்காவது சட்டப் பின்னணி இருக்க வேண்டும். தலைமை உறுப்பினர், ஏளிதாக, இந்தியாவின் தலைமை நீதிபதியாக இருப்பவர் அல்லது இருந்தவராகவோ அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதியாகவோ இருப்பார்

. இன்று வரை தேர்வு ஆணையம் உருவாக்கப்படவில்லை. நிச்சயமாக தேடுதல் ஆணையமும் இருக்காது. தேர்வு ஆணையம், லோக்பாலின் தலைமை மற்றும் இதர உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கப்பதற்கான செயல் முறையைக் கூட உருவாக்கவில்லை இதுபோன்ற மாண்புமிகு பதவிகளில் நியமிக்கப்படுகிறவர் இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதியாகவோ அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதியாகவோ இருக்கும்போது, தேர்ந்தெடுக்கப்ப்டுவதற்கு தகுதியான நபர்களின் எண்ணிக்கை குறைவானதாக இருக்கும எனவே வேலைக்கான விண்ணப்பங்கள் தேவையில்லை. எந்த நிலையிலும் விளம்பரம் வெளியிடப்பட வேண்டுமா வேண்டாமா என்பது குறித்து தேர்வு ஆணையம்தான் தீர்மானிக்க வேண்டும். அரசின் நிர்வாகப் பிரிவுக்கு இந்த விஷயத்தில் எந்தப் பங்கும் இல்லை.. நிலைமை இப்படி இருக்க பணியாளர்கள் மற்றும் பயிற்சிக்கான துறை இன்னும் முழுதாக உருவாக்கப்படாத தேர்வுக் குழுவின் அதிகாரத்தை பறித்துக்கொண்டுள்ளது..மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான விண்னப்பங்களை வரவேற்கும் விளம்பரங்களை அது வெளியிட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் பதவியில் இருக்கும் நீதிபதிகளோ ஓய்வுபெற்ற நீதிபதிகளோ அவர்களின் ஓய்வுக்குப் பின் வழங்கப்படும் பணிக்கு விண்ணப்பம் சமர்பிக்க வேண்டும் என்ற யோசனையே அவர்கள் வகித்த பதவியின் கண்ணியத்துக்கு இழுக்கு விளைவிப்பதாகும். தங்கள் பணி அனுபவக் குறிப்புகளை வைத்துக்கொண்டு நிர்வாகத்திடம் விண்ணப்பிக்கும் ஓய்வுபெற்ற நீதிபதிகள் அவர்களின் சுயமரியாதையையும் கண்ணியத்தையும் சமரசம் செய்துகொள்கிறார்கள். வேலை தேடும் நீதிபதி, லோக்பால் உறுப்பினராக நியமிக்கப்பட தகுதியற்றவர் ஆகிறார். எந்த நிலையிலும் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட வேண்டுமா வேண்டாமா என்பது குறித்து தேர்வு ஆணையம்தான் தீர்மானிக்க வேண்டும் . மத்திய அரசு இந்த அதிகாரத்துக்கு துளியும் தொடர்பற்றது. இதற்காக வெளியிடப்பட்ட விளம்பரம் லோக்பால் சட்டத்துக்கு

முரணானது . அவர்கள் வகிக்கும் பதவிகளுக்காக நியமிக்கப்பட்ட லோக்பால் தேர்வு ஆணையத்தின் நான்கு உறுப்பினர்களான பிரதமர், மக்களவை சபாநாயகர், இந்தியாவின் தலைமை நீதிபதி மற்றும் மக்களவையின் எதிர்கட்சித் தலைவர் ஆகியோருக்கு அவர்களது பணி, பணியாளர்கள் மற்றும் பயிற்சிக்கான துறையால் பறிக்கப்பட்டுவிட்டது என்பதை எழுத விரும்புகிறேன். இந்த சட்ட விரோதமான விளம்பரம் திருமப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.